# 5 கணக்கீட்டுச் சமன்பாடு




இவ் அத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்

5.1 கணக்கீட்டுச் சமன்பாடு

5.2 கணக்கீட்டுச் சமன்பாட்டைக் கட்டியெழுப்புதல்

5.3 வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை

5.4 உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள்

## 5.1 கணக்கீட்டுச் சமன்பாடு

வணிகமொன்றின் சொத்துக்களும் அச்சொத்துக்களின் உரிமைத்துவமும் அவ் வணிகத்தினது கணக்கறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும். எல்லாச் சொத்துக்களும் ஏதாவதொரு பிரிவினருக்கு உரித்துடையவையாகக் காணப்படும். எனவே, சொத்துக்களாக வெளிப்படுத்தப்படும் பெறுமானங்களும் உரிமைத்துவமாக வெளிப் படுத்தப்படும் பெறுமானங்களும் ஒன்றுக்கொன்று சமமானவையாகக் காணப்படும். இச்சமப்படும் தொடர்பினைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் சமன்பாட்டு வடிவம் ''கணக்கீட்டுச் சமன்பாடு'' என அழைக்கப்படும்.

## 5.2 கணக்கீட்டுச் சமன்பாட்டைக் கட்டியெழுப்புதல்

வணிகத்திற்குத் தேவையான வளங்கள் அனைத்தும் உரிமையாளரால் வழங்கப் பட்டிருக்கும்போது கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு அமையும்.

**சொத்துக்கள் = உரிமை**

**உதாரணம் :-**

கமலன் ரூ. 500 000 இட்டு வணிகமொன்றை ஆரம்பித்தார், இங்கு வணிகத்திற்கு ரூ. 500 000க்கான சொத்தொன்று (காசு) கிடைக்கப் பெற்றதுடன், அம்முழுமையான பெறுமானமும் வணிகத்தின் உரிமை யாளரான கமலனுக்கு உரித்துடையதாகக் காணப்படுகின்றது.

இதற்கமைய

| சொத்துக்கள் | = | உரிமை |
|---|---|---|
| காசு | | மூலதனம் |
| ரூ. 500 000 | = | ரூ. 500 000 |

வணிகமொன்று விரிவடைகின்றபோது உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படுகின்ற வளங்கள் மாத்திரம் போதியனவாகக் காணப்படாது இருக்கலாம். இங்கு வணிகத்துக்கு வெளியாட்களது வளங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படலாம். இவ்வளங்களைக் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் ''**பொறுப்புகள்**'' உருவாகும். இத்தகைய பொறுப்புக்கள் காணப்படும்போது வணிகத்தின் சொத்துக்களின் ஒரு பகுதி கடன் வழங்கியவர்களுக்கு உரித்துடைய வையாகும். எஞ்சிய பகுதியானது உரிமையாளர்களுக்கு உரித்துடையவையாகக் காணப்படும்.

இதற்கமைய கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பின்வருமாறு கட்டியெழுப்ப முடியும்.

**சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்**

உதாரணம் :-

மேற்காட்டியவாறு மூலதனம் கிடைக்கப்பெற்ற பின்னர் கமலனின் வணிகமானது ரூ. 300 000 வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்ளு மாயின் வணிகத்தில் காணப்பட்ட சொத்துக்கள் (காசு) ரூ. 300 000 இனால் அதிகரிப்பதுடன், வணிகத்தினால் வெளியாட்களுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 300 000 இற்கான பொறுப்பொன்று (வங்கிகடன்) உருவாகும்.

இதற்கமைய இரண்டாவது கொடுக்கல் வாங்கலையும் உள்ளடக்கியவாறான கணக் கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு முன்வைக்கப்பட முடியும்.

| சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| காசு | | மூலதனம் | + | வங்கிக் கடன் |
| ரூ. 800 000 | = | ரூ. 500 000 | + | ரூ. 300 000 |

## 5.3 வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை

வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக அவ்வணிகத்தின் சொத்துக்கள், உரிமை, பொறுப்புகள் என்பவற்றின் பெறுமானங்கள் மாற்றமடையும். எனவே, அவற்றுக் கிடையிலான தொடர்பினைக் காட்டக்கூடியவாறாகக் கணக்கீட்டுச் சமன்பாடும் மாற்றமடையும். இம்மாற்றமடையும் நிலைமையினைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

கொடுக்கல் வாங்கல் 01 :- உரிமையாளரால் ரூ. 800 000 மூலதனமாக இடப்படல்.

| சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| காசு ரூ. 800 000 | = | மூலதனம் ரூ. 800 000 | + | ———— |

கொடுக்கல் வாங்கல் 02 :- ரூ. 100 000 பெறுமதியான தளபாடம் கொள்வனவு செய் யப்பட்டது. இதற்கமையக் கணக்கீட்டுச் சமன்பாடானது பின்வருமாறு மாற்றமடையும்.

| | தளபாடம் + | காசு | = | மூலதனம் | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | | = | உரிமை | + | பொறுப்பு |
| | ரூபா | ரூபா | | ரூபா | | ரூபா |
| ஆரம்ப மீதி | _____ + | 800 000 | = | 800 000 | + | _____ |
| கொடுக்கல் வாங்கலால் ஏற்பட்ட மாற்றம் | 100 000 | (100 000) | = | _____ | + | _____ |
| **இறுதி மீதி** | 100 000 + | 700 000 | = | 800 000 | + | _____ |

**கொடுக்கல் வாங்கல்** 03 :- ரூ. 300 000இற்கான வங்கிக் கடனொன்று பெறப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலின் காரணமாகக் கணக்கீட்டுச் சமன் பாடானது பின்வருமாறு மாற்றமடையும்.

| | சொத்துக்கள் | | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் + | காசு | = | மூலதனம் | + | வங்கிக்கடன் |
| | ரூபா | ரூபா | | ரூபா | | ரூபா |
| ஆரம்ப மீதி | 100 000 + | 700 000 | = | 800 000 | + | _____ |
| கொடுக்கல் வாங்கலால் ஏற்பட்ட மாற்றம் | | 300 000 | = | _____ | + | 300 000 |
| இறுதி மீதி | 100 000 + | 1 000 000 | = | 800 000 | + | 300 000 |

**உதாரணம் :-**

கிருபாவினால் ஆரம்பிக்கபட்ட கணினி இயந்திரப் பழுதுபார்க்கும் வணிகத்தின் முதலாவது மாதத்திற்குரிய பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

1. உரிமையாளரால் மூலதனமாக இடப்பட்டது ரூ. 500 000
2. வங்கிக் கடன் ரூ. 200 000 பெறப்பட்டது.
3. நிலையான வைப்புக் கணக்கொன்றில் ரூ. 100 000 வைப்பிலிடப்பட்டது.
4. கணினி பழுது பார்த்தல் மூலம் பெற்ற வருமானம் ரூ. 60 000
5. வணிகத்தின் மாதாந்த வாடகை ரூ. 10 000 செலுத்தப்பட்டது.
6. தனது தனிப்பட்ட தேவை கருதி ரூ. 20 000 கிருபாவினால் வணிகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

7. உபகரணம் ஒன்று ரூ. 100 000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டது.

8. மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் ரூ. 5 000 செலுத்தப்பட்டது.

9. மேலதிக மூலதனமாக ரூ. 50 000 ஈடுபடுத்தப்பட்டது.

10. வங்கிக் கடனுக்காக மீளச் செலுத்திய தவணைக்கட்டணம் ரூ. 20 000

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைப் பின்வருமாறு காட்ட முடியும்.

| இலக்கம் | சொத்துக்கள் (ரூபா) | | = | உரிமை + பொறுப்புகள் (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | **உபகரணம்** | **நிலையான வைப்பு** | **காசு** | **உரிமை** | **வங்கி கடன்** |
| 1. | | | + 500 000 | + 500 000 | |
| 2. | | | + 200 000 | | + 200 000 |
| 3. | | + 100 000 | - 100 000 | | |
| 4. | | | + 60 000 | + 60 000 | |
| 5. | | | - 10 000 | - 10 000 | |
| 6. | | | - 20 000 | - 20 000 | |
| 7. | + 100 000 | | - 100 000 | | |
| 8. | | | - 5 000 | - 5 000 | |
| 9. | | | + 50 000 | + 50 000 | |
| 10. | | | - 20 000 | | - 20 000 |
| **இறுதி மீதி** | 100 000 | + 100 000 | + 555 000 | = 575 000 | + 180 000 |

**உதாரணம்** :-

சாமுவேல் வணிகத்தின் 20XX.08.01 திகதியன்று பின்வரும் மீதிகளைக் காண முடிந்தது.

| **சொத்துக்கள்** :- | **ரூபா** |
|---|---|
| தளபாட உபகரணம் | 300 000 |
| சரக்கிருப்பு | 200 000 |
| கடன்பட்டோர் | 100 000 |
| காசு | 200 000 |

**பொறுப்பு :-**

| | |
|---|---|
| வங்கி கடன் | 300 000 |
| கடன் கொடுத்தோர் | 100 000 |

20XX ஆகஸ்ட் மாத முதலாம் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

01. விற்பனைக்காக ரூ. 100 000 பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

02. ரூ. 100 000க்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள் தொகுதியொன்று ரூ. 125 000 பெறுமதிக்கு உடன் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.

03. வங்கிக் கடனில் ரூ. 50 000 மீளச்செலுத்தப்பட்டது.

04. சம்பளத்துக்காக ரூ. 10 000 கொடுக்கப்பட்டது.

05. வணிகத்தில் மீள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களில் ரூ. 20 000 பெறுமதியான கிரயம் கொண்ட பொருள்களை சாமுவேல் தனது தனிப்பட்ட தேவைக்காகப் பற்றியுள்ளார்.

06. ரூ. 50 000 பெறுமதியான தளபாட உபகரணங்கள் காரியாலயப் பயன்பாட்டிற்காகக் கொள்வனவு செய்யப்பட்டன.

07. மீள் விற்பனை நோக்கம் கருதி ரூ. 200 000 பெறுமதியான பொருள்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

08. ரூ. 60 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள் தொகுதியொன்று ரூ. 100 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

09. கடன்பட்டோரிடமிருந்து ரூ. 80 000 பெறப்பட்டது.

10. கடன்கொடுத்தோருக்கு ரூ. 50 000 செலுத்தப்பட்டது.

20XX.08.01 ஆம் திகதியன்று உரிமையாளரின் உரிமைப் பெறுமதியினைக் கணிப்பிடும் முறையைக் காட்டவும்.

20XX.08.01 இல் உள்ள உரிமை

உரிமை = மொத்த சொத்துக்கள் - பொறுப்புக்கள்

= (200 000 + 100 000 + 200 000 + 300 000) - (300 000 + 100 000)

= ரூ. 800 000 - ரூ. 400 000

= ரூ. 400 000

02. கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை

| | ö\õz xUPÒ 1 | | | | = E›ø© + ö£õÖ¨¦UPÒ 1 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | u Í £õh® | +\µUQ¸¨¦ | +Phß £m÷hõº | +Põ_ | E›ø© | +Á[QU Phß | +Phß öPõkz÷uõº |
| ஆரம்ப மீதி | 300 000 | +200 000 | +100 000 | +200 000 | +400 000 | +300 000 | +100 000 |
| 1. | | +100 000 | | -100 000 | | | |
| 2. | | -100 000 | | +125 000 | +25 000 | | |
| 3. | | | | -50 000 | | -50 000 | |
| 4. | | | | -10 000 | -10 000 | | |
| 5. | | -20 000 | | | -20 000 | | |
| 6. | +50 000 | | | -50 000 | | | |
| 7. | | +200 000 | | | | | +200 000 |
| 8. | | -60 000 | +100 000 | | +40 000 | | |
| 9. | | | -80 000 | +80 000 | | | |
| 10. | | | | -50 000 | | | -50 000 |
| இறுதி மீதி | 350 000 | +320 000 | +120 000 | +145 000 = | 435 000 | +250 000 | +250 000 |

**உதாரணம் :-**

ரூபன் வணிகத்தின் 20XX ஜீலை 01 ஆம் திகதி பின்வரும் மீதிகளைக் காணக் கூடியதாக இருந்தது.

| | ரூ. |
|---|---|
| மோட்டார் வாகனம் | 500 000 |
| சரக்கிருப்பு | 200 000 |
| காசு | 100 000 |
| வங்கிக் கடன் | 200 000 |
| கடன் கொடுத்தோர் | 100 000 |
| மூலதனம் | 500 000 |

**ஜூலை மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.**

01. உரிமையாளரினால் மேலதிக மூலதனமாக ரூ. 200 000 ஈடுபடுத்தப்பட்டது.

02. வட்டி ரூ. 2 000 உள்ளடங்கலாக வங்கித் தவணைக் கட்டணமாக ரூ. 20 000 செலுத்தப்பட்டது.

03. ரூ. 100 000 பெறுமதியான சரக்குகள் மீள் விற்பனை நோக்கம் கருதி கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

04. கடன் கொடுத்தோருக்கு ரூ. 50 000 செலுத்தப்பட்டது.

05. ரூ. 200 000 பெறுமதியான உரிமையாளருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை வணிகத்தின் தேவைக்கென வழங்கப்பட்டுள்ளது.

06. ரூ. 100 000 பெறுமதியான சரக்குகள் ரூ. 150 000த்திற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

07. காப்புறுதிக் கட்டணமாக ரூ. 10 000 செலுத்தப்பட்டது.

08. கடன்பட்டோரிடமிருந்து ரூ. 70 000 பெறப்பட்டது.

09. வணிகத்திலிருந்து உரிமையாளரின் வீட்டு மின்சாரக் கட்டணமாக ரூ. 5 000 செலுத்தப்பட்டது.

10. விற்பனைத் தரகு வருமானமாக ரூ. 10 000 கிடைக்கப் பெற்றது.

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களினைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் கீழ் காட்டுதல்.

| | சொத்துக்கள். ரூ. | | | = | உரிமை + | பொறுப்புக்கள் ரூ. | |
|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் | +சரக் கிருப்பு | + கடன் பட்டோர் | + காசு | உரிமை | + வங்கி கடன் | + கடன் கொடுத்தோர் |
| ஆரம்ப மீதி | 500 000 | +200 000 | | +100 000 | +500 000 | +200 000 | +100 000 |
| 1. | | | | +200 000 | +200 000 | | |
| 2. | | | | -20 000 | -2 000 | -18 000 | |
| 3. | | +100 000 | | | | | +100 000 |
| 4. | | | | -50 000 | | | -50 000 |
| 5. | +200 000 | | | | +200 000 | | |
| 6. | | -100 000 | +150 000 | | +50 000 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | | | | -10 000 | -10 000 | | |
| 8. | | | -70 000 | +70 000 | | | |
| 9. | | | | -5 000 | -5 000 | | |
| 10. | | | | +10 000 | +10 000 | | |
| இறுதி மீதி | 700 000 | +200 000 | +80 000 | +295 000 = | 943 000 | +182 000 | +150 000 |

வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களது விளைவுகள் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோது, அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் இடம்பெற்றுள்ள கொடுக்கல் வாங்கல்கள் எவை என்பதை இனங்காணுதலும் முக்கியமமானதாகும்.

பின்வரும் உதாரணம் மூலம் இதனை அறிந்து கொள்வோம்.

உதாரணம் :-

அழகர் வணிகத்தில் ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்கள் ரூ. | | | = | உரிமை + பொறுப்புக்கள் ரூ. | | |
|---|---|---|---|---|---|---|---|
| | காணி கட்டடம் | + சரக் கிருப்பு | + கடன் பட்டோர் | + காசு | உரிமை | + வங்கி கடன் | + கடன் கொடுத்தோர் |
| ஜனவரி 01 ஆ/மீ | 1000 000 | +300 000 | +200 000 | +300 000 | 1200 000 | +500 000 | +100 000 |
| 01.03 | | +200 000 | | -100 000 | | | +100 000 |
| 01.07 | | | | -20 000 | -20 000 | | |
| 01.10 | | | | -60 000 | -10 000 | -50 000 | |
| 01.14 | | -200 000 | +300 000 | | +100 000 | | |
| 01.18 | | | | +300 000 | +300 000 | | |
| 01.21 | | | | -100 000 | | | -100 000 |
| 01.25 | | | -400 000 | +400 000 | | | |

இவ்வணிகத்தின் உரிமையாளரால் இம்மாதத்தில் எவ்வித பற்றும் மேற்கொள்ளப் படவில்லை.

ஒவ்வொரு தினத்திலும் இடம்பெற்றதாகக் கருதக் கூடிய கொடுக்கல் வாங்கல்களை பெறுமானங்களுடன் பின்வருமாறு முன்வைக்க முடியும்.

ஜன. 03 ரூ. 100 000 பெறுமதியான பொருள்கள் உடன் காசுக்கும் ரூ. 100 000 பெறுமதியான பொருள்கள் கடன் அடிப்படையிலும் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜன. 07 வணிகத்தின் செயற்பாட்டுச் செலவொன்றிற்காக ரூ. 20 000 காசாகச் செலுத்தப்பட்டது.

ஜன. 10 வட்டி ரூ. 10 000 உட்பட வங்கித் தவணைக்கட்டணமாக ரூ. 60 000 செலுத்தப்பட்டது.

ஜன. 14 ரூ. 200 000 கிரயம் கொண்ட பொருள்கள் ரூ. 300 000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

ஜன. 18 மேலதிக மூலதனமாக ரூ. 300 000 இடப்பட்டது.

ஜன. 21 கடன் கொடுத்தோருக்கு ரூ. 100 000 கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

ஜன. 25 கடன்பட்டோரிடமிருந்து ரூ. 400 000 பெறப்பட்டது.

## 5.4 உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள்

மேற்காட்டிய விடயங்களைப் பற்றிய விளக்கத்தினைப் பெற்றதன் பின்னர் உங்களுக்கு வணிக உரிமையாளரின் உரிமையில் அதிகரிப்பையும் குறைவையும் ஏற்படுத்திய கொடுக்கல் வாங்கல்களை இனங்காணக் கூடியதாக இருந்திருக்கும். வணிகமொன்றில் உரிமை மாற்றமடைவதில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் செல்வாக்குச் செலுத்தக் கூடியவையாகும்.

- **மேலதிக மூலதனமிடல்**
- **வருமானங்கள்**
- **பற்றுதல்கள்**
- **செலவினங்கள்**

வணிகத்தை நடாத்திச் செல்லும்போது அதனது தேவைக்கமைய காசு அல்லது ஏனைய சொத்துக்களை உரிமையாளர்களால் மேலதிக மூலதனமாக ஈடுபடுத்த முடியும். இந்நடவடிக்கையானது உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

வணிகத்தின் உரிமையாளர் தனது சொந்தப்பயன்பாடு கருதி வணிகத்திலிருந்து காசு அல்லது ஏனைய சொத்துக்களை எடுத்துக் கொள்ள முடியும். இவற்றை ''பற்றுக்கள்'' என இனங்காட்டுவதுடன், இவற்றினால் உரிமையாளரின் உரிமையில் குறைவு ஏற்படும்.

வணிகத்தினால் பெறப்படும் வருமானங்களினால் உரிமை அதிகரிக்கும். அதே வேளை செலவினங்களினால் உரிமையில் குறைவு ஏற்படும்.

உதாரணம் :-

அகில் வணிகத்தில் 20xx ஆம் வருடத்திற்கான தகவல்களுள் சில பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| மூலதனம் (20xx.01.01 இல்) | 358 500 |
| நிதியாண்டுச் செலவுகள் | 128 300 |
| நிதியாண்டு வருமானங்கள் | 254 620 |

ஜூன் 30 ஆம் திகதியில் உரிமையாளரினால் இடப்பட்ட மூலதனம் ரூ. 75 000 20xx-டிசம்பர் 31 ஆம் திகதியில் உரிமையாளரின் உரிமையைப் பின்வருமாறு கணிப்பிட முடியும்.

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| மூலதனம் | 20xx.01.01 | 358 500 |
| கூட்டு : வருமானங்கள் | | 254 620 |
| மேலதிக மூலதனம் | | 75 000 |
| | | 688 120 |
| கழி : செலவினங்கள் | | (128 300) |
| 20xx 12 31ஆம் திகதியன்று உரிமை | | 559 820 |



**செயற்பாடு** 01

அனந்தா வணிகத்தின் கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாடு 20xx ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களைக் காட்டுகின்றது.

| | சொத்துக்கள் ரூ. | | = | உரிமை ரூ. | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் வாகனம் | + சரக் கிருப்பு | + கடன் பட்டோர் | + காசு | உரிமை | + கடன் கொடுத்தோர் |
| 4.1 **மீதி** | 500 000 | +200 000 | | +200 000 | +700 000 | +200 000 |
| 04.03 | | | | +300 000 | +300 000 | |
| 04.05 | | +100 000 | | | | +100 000 |
| 04.08 | | | | -50 000 | | -50 000 |
| 04.10 | | | | -10 000 | -10 000 | |
| 04.11 | | -60 000 | +100 000 | | +40 000 | |
| 04.17 | +200 000 | | | | +200 000 | |
| 04.19 | | -20 000 | | | -20 000 | |
| 04.23 | | | -20 000 | +20 000 | | |
| 04.28 | | -5 000 | | | -5 000 | |
| 04.30 | | | | | +50 000 | -50 000 |
| **இறுதி மீதி** | 700 000 | 215 000 | 80 000 | 460 000 | 1255 000 | 200 000 |

**குறிப்பு :-**

இம் மாதத்தில் உரிமையாளரினால் எவ்விதப் பற்றும் மேற்கொள்ளப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டுத் தாக்க விளைவுகளிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.



### செயற்பாடு 02

நிசாந்தன் வணிகத்தின் ஜனவரி மாதத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

ஜனவரி 01. மூலதனமாக ரூ. 300 000 ஈடுபடுத்தப்பட்டது.

04. ரூ. 50 000 கிரயம் கொண்ட பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

09. மாதாந்த வணிக நிலைய வாடகையாக ரூ.10 000 செலுத்தப்பட்டது.

13. ரூ. 40 000 பெறுமதியான பொருள்கள் ரூ. 60 000 இற்கு விற்பனை செய்தல்.

19. வங்கிக் கடனாக ரூ. 300 000 பெறப்பட்டது.

21. வணிகத்திலிருந்து நிசாந்தனின் வீட்டுத் தொலைபேசிக் கட்டணமான ரூ. 10 000 செலுத்தப்பட்டது.

28. கடன்பட்டோரிடமிருந்து ரூ. 30 000 பெறப்பட்டது.

30. வங்கிக் கடனுக்கான மாதாந்த வட்டி ரூ. 5000 செலுத்தப்பட்டது.

31. வணிகத்தின் மின்சாரக் கட்டணம் ரூ. 5000 செலுத்தப்பட்டது.

மேற்காட்டிய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களின் மூலமும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கங்களைப் பெறுமானங்களுடன் காட்டுக.

## செயற்பாடு 03

கபிலன் வணிகத்தின் 20xx ஆண்டுக்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| (20xx.01.01 இல்) மூலதனம் | 415 000 |
| நிதியாண்டு வருமானங்கள் | 210 300 |
| நிதியாண்டு செலவினங்கள் | 122 000 |
| வருடத்தில் இடப்பட்ட மேலதிக மூலதனம் | 50 000 |

20xx டிசெம்பர் 31 ஆம் திகதியில் உரிமையாளரின் உரிமையைக் கணிப்பிடுக.

## செயற்பாடு 04

வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன் பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் கீழ்க்காட்டடப்பட்டுள்ளன.

| திகதி | சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூன் 1 | அதிகரித்தல்<br>குறைதல் | | | | |
| ஜூன் 2 | குறைதல் | = | குறைதல் | | |
| ஜூன் 3 | அதிகரித்தல் | = | | | அதிகரித்தல் |
| ஜூன் 4 | அதிகரித்தல் | = | அதிகரித்தல் | | |
| ஜூன் 5 | குறைதல் | = | | | குறைதல் |

மேற்காட்டிய அட்டவணைக்கேற்ப ஒவ்வொரு தினத்திலும் நிகழ்ந்த இரு சாத்தியமான கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.